இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
பாராளுமன்றம்

2002 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, பணச்சட்ட (திருத்தச்) சட்டம்

(2002, திசெம்பர் மாதம் 17 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

2002, திசெம்பர் மாதம் 20 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சகத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 27.25 தபாற் செலவு : ரூபா 9.00

2002 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, பணச்சட்ட (திருத்தச்) சட்டம்

[2002 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 17 ஆந் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ—ஓ. 51/2002
4711

பணச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளு மன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம், 2002 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, பணச்சட்ட (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. பணச் சட்டத்தின் (இதனகத்துப்பின்னர் முதன்மைச் சட்டவாக்கம் எனக் குறிப்பீடு செய்யப்படும்) 5 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :— அத்தியாயம் 422 இன் 5ஆம் பிரிவைப் பதிலிடு செய்தல்.

"மத்திய வங்கியைத் தாபித்தலும் அதன் குறிக் கோள்களும்.

5. (இதனகத்துப்பின்னர் "மத்திய வங்கி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலங்கை மத்திய வங்கி என அழைக்கப்பட வேண்டியதும் அறியப்பட வேண்டியதுமான நிறுவகமொன்று, இலங்கையின் பண, நிதிசார் மற்றும் கொடுப் பனவுகள்முறைமையின் நிர்வாகம், மேற்பார்வை மற்றும் ஒழுங்குபடுத்தலுக்குப் பொறுப்பான அதிகாரசபையாக இத்தால் தாபிக்கப்படுவதுடன், இச்சட்டத்தின் வேறு ஏற்பாடுகளுக்குப் பங்க மின்றி, மத்திய வங்கி இச்சட்டத்தினால் அதிகார மளிக்கப்பட்ட செயல்களின் மூலம் இற்றைவரை சாத்தியமானவாறான, எய்தத்தக்கவாறான பாது காக்கின்ற கடமையும், இலங்கையின் உற்பத்திசார் வளங்களின் அபிவிருத்தியை ஊக்கப்படுத்து கின்றதும் மேம்படுத்துகின்றதுமான நோக்குடன் பின்வரும் குறிக்கோள்கள் அவையாவன :—

(அ) பொருளாதார மற்றும் ஸ்திர நிலை ; அத்துடன்

(ஆ) நிதிசார் முறைமை ஸ்திரநிலை

என்பனவும் இத்தால் பொறுப்பிக்கப்படுகின் றது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவைத் திருத்துதல்.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(அ) அதன் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் :—

"(1) மத்திய வங்கியின் பணச்சபையானது, இச்சட்டத்தின்கீழ்க் கையாளப்படும் அல்லது மேற்கொள்ளப்படும் அதிகாரமளிக்கப்பட்ட கொள்கைகளை அல்லது நடவடிக்கைகளைத் தீர்மானிப்பதற்கு மேலதிகமாக இச்சட்டத்தின்கீழ் மத்திய வங்கியின் தத்துவங்கள், கடமைகள், பணிகள் அளிக்கப்படல் வேண்டும் என்பதுடன் வங்கியின் முகாமைத்துவம், தொழிற்பாடுகள் மற்றும் நிருவாகம் என்பவற்றுக்குப் பொறுப்பாக இருத்தலும் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், பணச்சபை தோதானதெனக் கருதுகின்றவிடத்து, 10(அ), (ஆ), (ஆஆ), (ஈ) என்னும் பிரிவு மற்றும் 27ஆம் பிரிவு ஆகியவற்றால் சபைக்கு அளிக்கப்பட்ட அல்லது விதிக்கப்பட்ட அல்லது சாட்டப்பட்ட ஏதேனும் தத்துவம், கடமை அல்லது பணியை மத்திய வங்கியின் ஆளுநர் அல்லது எவரேனும் அலுவலர் அல்லது அத்தகைய அலுவலர்களின் குழுவொன்றுக்குக் கையளிக்கலாம்.";

(ஆ) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன்மூலம் :

"(1அ) முதலாம் உட்பிரிவின்கீழ் பணச்சபையால் ஏதேனும் தத்துவம், கடமை அல்லது பணி கையளிக்கப்படுமிடத்து, எவ்வாளுக்கு அல்லது ஆட்களின் குழுவுக்கு அத்தகைய தத்துவம், கடமை அல்லது பணி கையளிக்கப்படுகின்றதோ அவ்வாள் அல்லது அவ்வாட்களின் குழு பணச்சபையால் வழங்கப்படக்கூடியவாறான அத்தகைய பொது அல்லது விசேட பணிப்புரைகள் அல்லது வழிகாட்டு நெறிகளுக்கிணங்க அத்தகைய

தத்துவம் கடமை அல்லது பணியைப் பிரயோகித்தலும் ஆற்றுதலும் அல்லது நிறைவேற்றுதலும் வேண்டும்.";

(இ) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஆ) பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :—

"(இ) அரசியலமைப்புச் சபையுடனான ஒருப்பாட்டுடன், நிதியமைச்சரின் விதப்புரைமீது சனாதிபதியால் நியமிக்கப்படும் மூன்று உறுப்பினர்கள்"

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(அ) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் "ஏதேனும் உள்ளூரதிகார சபையின்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஏதேனும் மாகாண சபையின் அல்லது உள்ளூரதிகார சபையின்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(ஆ) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் "ஏதேனும் உள்ளூரதிகார சபையின் உறுப்பினர்களாக" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஏதேனும் மாகாண சபையின் அல்லது உள்ளூரதிகார சபையின் உறுப்பினர்களாக" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(இ) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :—

"(இ) (மத்திய வங்கி தவிர்ந்த) ஏதேனும் வங்கித் தொழில் நிறுவனத்தின் அல்லது மத்திய வங்கியினால் மேற்பார்வை செய்யப்படும் அல்லது ஒழுங்குபடுத்தப்படும் வேறேதேனும் நிறுவனத்தின் பணிப்பாளர் ஒருவராக, அலுவலரொருவராக, ஊழியரொருவராக அல்லது பங்குதாரரொருவராக இருந்தால்".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவைத் திருத்துதல்.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(அ) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "ஆளுநரினதும், 8(2) என்னும் பிரிவின் (இ) என்னும் பந்தியின்கீழ் நியமிக்கப்படும் (இதனகத்திதன்மேல் "நியமன உறுப்பினர்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஆளினது பதவிக்காலம்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :—

"ஆளுநரினதும், 8 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியின்கீழ் நியமிக்கப்படும் (இதனகத்திதன் மேல் "நியமன உறுப்பினர்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) எவரேனும் ஆளினதும் பதவிக்காலம், ";

(ஆ) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் "நியமன உறுப்பினர்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "நியமன உறுப்பினர் ஒருவரால்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவைத் திருத்துதல்.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவு அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் "நியமன உறுப்பினர்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "நியமன உறுப்பினர் ஒருவர்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவைத் திருத்துதல்.

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :

(அ) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "நியமன உறுப்பினர்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "நியமன உறுப்பினர் ஒருவர்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(ஆ) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் "நியமன உறுப்பினர்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "நியமன உறுப்பினர் ஒருவராக" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவைத் திருத்துதல்.

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவு "அல்லது நியமன உறுப்பினர்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "அல்லது நியமன உறுப்பினர் ஒருவரை" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(அ) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் "இரண்டு உறுப்பினர்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "மூன்று உறுப்பினர்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(ஆ) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவில் —

(i) (1) "ஆகக் குறைந்தது இரண்டு உறுப்பினர் களின்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஆகக் குறைந்தது மூன்று உறுப்பினர்களின்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ii) "மூன்று உறுப்பினர்களினதும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஐந்து உறுப்பினர் களினதும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

10. முதன்மைச் சட்டவாக்கத்தின் 30 ஆம் பிரிவு, அப்பிரிவின் (9) ஆம் உட்பிரிவை உடனடுத்துப்பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 30 ஆம் பிரிவைத் திருத்துதல்.

10.(அ) உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியொன்று தொடர்பில் (இதனகத்துப் பின்னர் "வங்கித்தொழிற் சட்டம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித் தொழிற் சட்டத்தின் 76க என்னும் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ்ப் பணச்சபையினால் கட்டளை யொன்று ஆக்கப்பட்டுள்ளவிடத்து, இப்பிரிவின் (3), (4), (5), (6), (7), (8), (9) ஆகிய உட்பிரிவுகளின் ஏற்பாடுகள், வங்கித் தொழிற் சட்டத்தின் 76க என்னும் பிரிவின் (3) ஆம், (4) ஆம் உட்பிரிவுகள் எவ்வாறிருப்பினும்சரி, இவ்வுட்பிரிவின் (ii) ஆம் பந்திக்கமையவும், ஏற்றமாற்றங்களுடனும், அத்த கைய வங்கி ஒரு வங்கித்தொழில் நிறுவனமாக உள்ளதென்றாற்போன்று அதற்கு ஏற்புடையன வாதல் வேண்டும்.

(ஆ) இவ்வுட்பிரிவின் (i) ஆம் பந்தியின்கீழ், இப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளை ஏற்புடைத்தாக்குதல் —

(i) உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியொன்றின் ஒடுக்கப்படுதலைத் தேவைப்படுத்துமிடத்து பணச்சபையானது, வங்கித் தொழிற்சட்டத்தின் ixஅ என்னும் பாகத்தின்கீழ் அத்தகைய வங்கிக்கு வழங்கப்பட்ட உரிமத்தை இல்லாதாக்குதல் வேண்டுமென்பதுடன், அச்சட்டத்தின் viii ஆம் பாகத்தின் ஏற்பாடுகள், இலங்கையினுள் கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட வங்கியொன்றின் விடயத்தில், வங்கியின் வலுக்கட்டாய ஒடுக்குதலாக அது இருந்தது என்றாற்போன்று, அல்லது இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட வங்கியொன்றின் விடயத்தில், அவ்வங்கியின் அலுவல்களை வலுக்கட்டாயமாக ஒடுக்குதல் அல்லது அவ்வங்கியின் தொழிலை முடிவுறுத்தல் என்றாற்போன்று, அத்தகைய ஒடுக்குதலுக்கு ஏற்புடையனவாதலும் வேண்டும் ;

(ii) உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியொன்றின் தொழிலை மீளத்தொடங்குதலைத் தேவைப்படுத்துமிடத்து, பணச்சபையானது வங்கித் தொழிற் சட்டத்தின் 76ங என்னும் பிரிவின் கீழ் அதற்களிக்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகிக்கலாம் ;

(இ) இவ்வுட்பிரிவில் "உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கி" என்பது, வங்கித் தொழிற் சட்டத்திலுள்ள அதே பொருளையுடையதாதல் வேண்டும்.

11. முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :—

முதன்மைச் சட்டவாக்கத்தின் 31 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

"வங்கித் தொழில் நிறுவனம் ஒன்றை ஒடுக்குதல்.

31. வங்கித்தொழில் நிறுவனமொன்றை ஒடுக்கும்படி தேவைப்படுத்தி 30 ஆம் பிரிவின்கீழ்ப் பணச் சபையினால் கட்டளையொன்று ஆக்கப்படுமிடத்து—

(அ) வர்த்தக வங்கியொன்றின் விடயத்தில், பணச்சபையானது, வங்கித்தொழிற் சட்டத்தின்கீழ் அதற்கு வழங்கப்பட்ட உரிமத்தை இல்லாதாக்குதல் வேண்டுமென்பதுடன், அச்சட்டத்தின் viii ஆம் பாகத்தின் ஏற்பாடுகள், இலங்கையினுள் கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட வங்கியொன்றின் விடயத்தில், அவ்வங்கியின் வலுக்கட்டாய ஒடுக்குதலாக அது இருந்தது என்றாற்போன்று, அல்லது இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட வங்கியொன்றின் விடயத்தில், அவ்வங்கியின் அலுவல்களை வலுக்கட்டாயமாக ஒடுக்குதல் அல்லது அவ்வங்கியின் தொழிலை முடிவுறுத்தல் என்றாற் போன்று, ஏற்புடையனவாதலும் வேண்டும் ;

(ஆ) முப்பதாம் பிரிவின் (10) ஆம் உட்பிரிவு ஏற்புடையதாகவுள்ள உரிமமளிக்கப்பட்ட விசேட வங்கியொன்றாகவிராத வேறேதேனும் வங்கித்தொழில் நிறுவனத்தின் விடயத்தில், வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர், ஒடுக்குதல் நோக்கத்துக்காக ஒழித்துக்கட்டுபவராக இருப்பதற்கென ஆளொருவரைப் பெயர்குறித்து நியமித்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய பெயர் குறித்த நியமனத்துக்கு அமைய, அத்தகைய நிறுவனம், அத்தகைய நிறுவனத்துக்கு ஏற்புடைப்பாலதான சட்டத்துக்கிணங்க ஒடுக்கப்படுதலும் வேண்டும்.".

12. முதன்மைச் சட்டவாக்கத்தின் 34 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :—

முதன்மைச் சட்டவாக்கத்தின் 34 ஆம் பிரிவைத் திருத்துதல்.

மாதாந்தக் கூற்று.

34. மத்திய வங்கியானது, ஒவ்வொரு மாதத்தினதும் கடைசி நாளன்று உள்ளவாறான அதன் சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் அளவையும் அமைப்பையும் காட்டுகின்ற பொதுவான ஐந்தொகையொன்றை அடுத்துப் பின்வரும் மாதத்தின் கடைசி நாளுக்கு முன்னர் வெளியிடுதல் வேண்டும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 62 ஆம் பிரிவைத் திருத்துதல்.

13. முதன்மைச் சட்டவாக்கத்தின் 62 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பிரிவு இடப்படுகின்றது :—

பண வழக்கீடு என்னும் சொல்லமைப் பின் வரை விலக்கணம்.

62. இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக, "பண வழக்கீடு" என்னும் சொல்லமைப்பு எல்லா நாணயங்கள், கேள்வி வைப்பு, கால மாற்றம், சேமிப்பு வைப்புக்கள் மற்றும் காலத்துக்குக் காலம் பணச் சபையால் விதித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய வேறு நிதிச் சொத்துக்கள் மற்றும் பணச்சபையால் விதித்துரைக்கப் படக்கூடியவாறான அரசாங்கம், வர்த்தக வங்கிகள் மற்றும் அத்தகைய நிதி நிறுவனங்கள் அல்லது நிதி நிறுவனங்களின் வகைகள் என்பன தவிர்ந்த ஆட்களினால் சொந்தமாக வைத்திருக்கப் படுபவை எனப் பொருள்படும் என்பதுடன் அப்பிரிவின் நோக்கங்களுக்காக, "நிதி நிறுவனங்கள்" என்பன 93 ஆம் பிரிவின் (5) ஆம் உட் பிரிவின் அதற்கு அளிக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் iii ஆம் அத்தியாயத்தில் iii என்னும் புதிய பாகத்தை உட்புகுத்துதல்.

14. முதன்மைச் சட்டவாக்கமானது, அதன் 62 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வருவதனை உட்புகுத்துவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"பாகம் III — கொடுப்பனவும் கொடுத்துத் தீர்த்தல் முறைமைகளும்.

நிதிகளைக் கைமாற்று வதற்கும் பங்குச் சான்றிதழ் தொகுதிகளற்ற பிணைப்

62அ. (1) பின்வருவனவற்றுக்காக மத்திய வங்கி ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட முறைமைகளைத் தாபித்துத் தொழிற்படுத்தலாம்:—

(அ) மத்திய வங்கியினாலும், வர்த்தக வங்கியினாலும் மத்திய வங்கியுடன் கொடுத்துத் தீர்த்ததன் கணக்கொன்றைப் பேணுகின்ற

பொறுப்புக் களைக் கைமாற்று வதற்கும் கொடுத்துத் தீர்ப்பதற்கான முறைமையைத் தாபித்தல்.

வர்களும் மத்திய வங்கியினால் அத்தகைய முறைமைக்குப் பங்குபற்றுநராகச் சேர்க் கப்படுகின்றவர்களுமான அத்தகைய வேறு நிறுவனங்களினாலும் ஆட்களினா லும் அவர்களுக்கிடையேயும் நிதிகளைக் கைமாற்றுவதற்காகவும் :

(ஆ) மத்திய வங்கியினாலும் நேரடிப் பங்கு பற்றுநர்களினாலும் அவர்களுக்கிடையே யும் பங்குச் சான்றிதழ் தொகுதிகளற்ற பிணைப் பொறுப்புக்களைக் கைமாற்று வதற்காகவும் கொடுத்துத் தீர்ப்பதற் காகவும் :

(இ) பந்தி (ஆ) வின்கீழ் பங்குச் சான்றிதழ் தொகுதிகளற்ற பிணைப்பொறுப்புகளைக் கைமாற்றுவது மற்றும் கொடுத்துத் தீர்ப் பது தொடர்பில் கொடுப்பனவுக் கட்டுப் பாடுகளின் கொடுத்துத்தீர்ப்பதற்காகவும்.

(2) ஓராம் உட்பந்தியின்கீழ் தாபிக்கப்பட்ட ஒரு முறைமை கொடுப்பனவுக் கடப்பாடுகளை அல்லது பிணைப் பொறுப்புகளைத் தீர்த்துவைப் பதற்காக அல்லது கொடுத்துத் தீர்ப்பதற்காக இலங்கையில் அல்லது வேறேதேனும் உள்ள இன்னொரு முறைமையில் இணைக்கப்படலாம்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட ஒரு முறைமையின் பங்குபற்றுநர்களுடன் மத்திய வங்கி உடன்படிக்கைகளைச் செய்துகொள்ளலாம் என்பதுடன், முறைமைகளைத் தொழிற்படுத்து வதற்கான விதிகளை எழுத்தில் முறைமையின் பங்குபற்றுநர்களுக்கு வழங்கலாம்.

(4) மூன்றாம் உட்பிரிவின் பொதுத்தன்மைக்குப் பங்கமின்றி, அத்தகைய விதிகள் பின்வருவன வற்றுக்கு ஏற்பாடுசெய்யலாம் :—

(அ) பங்குபற்றுநர்களுக்கான பிணைப் பொறுப்புகளின் துணைமையானதற்கெ திராக நாளின் போதான கடனுக்கு ஏற்பாடு செய்தலுக்கும் அத்தகைய கடன் தொடர் பான ஏற்பாடுகளுடன் இணைந்துள்ள நிபந்தனைகளுக்கும் :

(ஆ) இலத்திரனியற் கையொப்பங்கள் தொடர்பில் அத்தாட்சிப்படுத்துகை அதிகாரிகளை நியமித்தலுக்கு ஏற்புடையப்படற்பாலதான ஏதேனும் சட்டத்தின்கீழ் பங்குபற்றுநர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கும் நோக்கத்துக்காக மத்தியவங்கியியை அத்தாட்சிப்படுத்தும் அதிகாரியாக நியமித்தலுக்கும்;

(இ) பங்குபற்றுநர்களுக்கான நடத்தைக் கோவையொன்றை வகுத்தமைத்தலுக்கும் ஏற்றுக்கொள்ளுதலுக்கும் ;

(ஈ) இலத்திரனியல் ரீதியில் நிறைவேற்றப்படும் கொடுக்கல் வாங்கல்களை மெய்யென்று உறுதிப்படுத்தலுக்கும் ;

(உ) மத்திய வங்கி, முறைமையின் நலன்கருதி அவசியமென அது கொண்டால், முறைமையின் தொழிற்பாட்டை இல்லாதொழித்தலுக்கும் அல்லது இடைநிறுத்தலுக்கும் அல்லது எவரேனும் பங்குபற்றுநரின் அல்லது ஏதேனும் வகுதியினரான பங்குபற்றுநர்களின் சிறப்புரிமைகளை அல்லது உரிமைகளை மீளப் பெறுதலுக்கும் அல்லது இடைநிறுத்துதலுக்கும் அல்லது பங்குபற்றுநரொருவரின் முறைமையிலுள்ள உறுப்பாண்மையை இடைநிறுத்துதலுக்கும் அல்லது ஒழித்தலுக்கும்;

(ஊ) கொடுத்துத் தீர்த்தல் முறைமை தொடர்பில் பங்குபற்றுவோரின் தொழிற்பாட்டு முறைமைகளைக் கணக்காய்வு செய்வதற்கு அல்லது சோதனையிடுவதற்குக் கணக்காய்வாளர்களை அல்லது பரிசோதகர்களை நியமித்தலுக்கும் ; அத்துடன்

(எ) பங்குபற்றுவோரினால் மத்திய வங்கிக்கு இறுப்பனவுகளும் கட்டணங்களும் கொடுப்பனவு செய்யப்படுதலுக்கும்.

(5) ஓராம் உட்பிரிவின்கீழ் தாபிக்கப்படும் ஒரு முறைமையினூடாகச் செய்யப்படும் கொடுப்பனவு அல்லது கைமாற்றம் ஒன்று பின்வரும் சந்தர்ப்பங்களில் இறுதியானதும், ஒழிக்கப்படற்பாலனல்லாததுமாகும் :—

(அ) நிதிகளின் கைமாற்றம் ஒன்றை மட்டுமே உட்படுத்துகின்ற கொடுக்கல் வாங்கலொன்றின் விடயத்தில், நிதிகளின் கைமாற்றம் பற்றுவைக்கப்படுதல் வேண்டுமென வேண்டுகோள்விடுக்கின்ற பங்குபற்றுதலின் கொடுத்துத் தீர்த்தல் கணக்கின்மீது ;

(ஆ) பிணைப்பொறுப்புகளின் கைமாற்றம் ஒன்றை மட்டுமே உட்படுத்துகின்ற கொடுக்கல் வாங்கலொன்றின் விடயத்தில், பிணைப்பொறுப்புகளின் கைமாற்றம் பற்றுவைக்கப்படுதல் வேண்டுமென வேண்டுகோள்விடுக்கின்ற பங்குபற்றுநரின் பிணைப்பொறுப்புகள் கணக்கின் மீது ;

(இ) நிதிகளின் கைமாற்றத்தையும் பிணைப் பொறுப்புகள் கைமாற்றத்தையும் உட்படுத்துகின்ற ஒரு கொடுக்கல்வாங்கலின் விடயத்தில், விடயத்துக்கேற்ப நிதிகளின் கைமாற்றத்தை அல்லது பிணைப் பொறுப்புகளின் கைமாற்றத்தை, எது முன்னதாக நிகழ்கின்றதோ அதற்கு வேண்டுகோள் விடுக்கின்ற பங்குபற்றுநரொருவரின் கொடுத்துத் தீர்த்தல் கணக்கை அல்லது பிணைப்பொறுப்புகள் கணக்கைப் பற்றுவைப்பதன் மீது ;

அத்துடன் வேறேதேனும் சட்டத்தில் முரணாக எது எவ்விதமிருப்பினும், அத்தகைய கொடுப்பனவு அல்லது கைமாற்றம் எதிர்மாறாக்கப் படுவதற்கோ, மீளச் செலுத்தப்படுவதற்கோ அல்லது தள்ளிவைக்கப்படுவதற்கோ தேவைப் படுத்தப்படுதலாகாது என்பதுடன், ஏதேனும் நீதிமன்றம் அத்தகைய கொடுப்பனவை அல்லது கைமாற்றத்தை நிவர்த்தி செய்வதற்கு அல்லது நிறுத்தி வைப்பதற்குக் கட்டளையிடுதலுமாகாது.

(6) இச்சட்டத்தின்கீழ் அல்லது உள்ளூர்த் திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் அல்லது பதிவுசெய்யப்பட்ட பங்குச் சான்றிதழ் தொகுதிகளற்ற பிணையங்கள் கட்டளைச் சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட பங்குத் தொகுதிச் சான்றிதழ்களற்ற பிணைப்பொறுப்புகள், விடயத்துக்கேற்ப, இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்படும் ஒழுங்குவிதிகளினால் அல்லது ஒழுங்குவிதிகளின்கீழ் அல்லது உள்ளூர்த் திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டத்தினால் அல்லது அதன்கீழ் அல்லது பதிவு செய்யப்பட்ட பங்குத்தொகுதி பிணையங்கள் கட்டளைச் சட்டத்தினால் அல்லது அதன்கீழ் ஏற்பாடு செய்யப்பட்டவாறு மட்டுமே கைமாற்றப் படுதல், அடைமானம் வைக்கப்படுதல், பாரபந்தங்களுக்குட்படுத்தப்படுதல், கடனாகக் கொடுக்கப்படுதல், கடனாகப் பெறப்படுதல் அல்லது கொடுக்கல் வாங்கல்கள் செய்யப்படுதல் வேண்டும். அதற்கிணங்கப் பயனுறுத்தப்பட்ட ஒரு கைமாற்றம், அடைமானம், பாரபந்தம், கடன், கடன்பெறுகை அல்லது கொடுக்கல் வாங்கல், வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் எது எவ்வாறிருப்பினும், செல்லுபடியுள்ளதாயும் பயனுள்ளதாயும் இருத்தல் வேண்டும்; அத்துடன் ஏற்புடையப்படற்பாலனவான அவ்வொழுங்கு விதிகளுக்கிணங்கத் துணைமையானவையாகப் பதியப்பட்ட எவையேனும் பங்குச் சான்றிதழ் தொகுதிகளற்ற பிணைப்பொறுப்புகளின்மீது முறைமையின் பங்குபற்றுநரொருவரின் கோரிக்கை அம்முறைமையின் பங்குபற்றுநர் ஒருவராகவிராத ஆளொருவரின் அத்தகைய பங்குச் சான்றிதழ் தொகுதிகளற்ற பிணைப் பொறுப்புகளின்மீதான கோரிக்கைகளின் மேல் முன்னுரிமை கொண்டதாதல் வேண்டும்.

(7) ஐந்தாம் ஆறாம் உட்பிரிவிலுள்ள எதுவும், (1) ஆம் உட்பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட முறைமை யொன்றினூடாக பயனுறச் செய்யப்பட்ட கொடுப் பனவு மாற்றம் அல்லது கொடுத்துத் தீர்வை

யொன்றினால் ஏதேனும் நட்டம் அல்லது சேதத்தை அனுபவித்திருக்கின்ற ஆள் ஒருவருக்குக் கிடைக்கக்கூடியதாகவிருக்கின்ற ஏதேனும் சட்டவுரிமையை அல்லது நிவாரணத்தைப் பாதித்தலாகாது.

(8) கம்பனிகளை ஒடுக்குவது தொடர்பிலான ஏதேனும் எழுதப்பட்ட சட்டத்தின் ஏற்பாடுகள் எவை எப்படியிருப்பினும், முறைமையொன்றின் பங்குபற்றுநரை ஒடுக்குகின்றமைக்கான நடவடிக்கைகள் தொடங்கியிருக்குமிடத்து :—

(அ) மத்திய வங்கியானது, நடவடிக்கைகள் எத்தினத்தில் தொடங்கியதோ அத்தினத்தில் அல்லது அத்தினத்திற்கு முன்பு உறப்பட்ட கடப்பாடுகளைப் பெறுவதற்காக முறைமையின் விதிகளால் அனுமதிக்கப்பட்ட அல்லது தேவைப்படுத்தப்பட்ட ஏதேனும் விடயத்தை செய்யலாம் ;

(ஆ) முறைமையின் விதிகளின்கீழ் பெறப்பட்டதான கடப்பாடுகள் நடவடிக்கைகளில் கருத்திற் கொள்ளப்படலாகாது ; அத்துடன்

(இ) மத்திய வங்கியினால் செய்யப்பட்ட பெறுகையையும் முறைமையின் விதிகளின்கீழ் பங்குபற்றுநரால் செய்யப்பட்ட ஏதேனும் கொடுப்பனவும் நடவடிக்கைகளில் வறிதாதலாகாது.

(9) பங்குபற்றுநர் ஒருவரை ஒடுக்குவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தால், அத்துடன் அத்தகைய பங்குபற்றுநரினால் செலுத்தப்படவேண்டிய கொடுப்பனவொன்று அல்லது தீர்வையொன்று (5) ஆம் அல்லது (8) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டவாறாக செய்யப்பட்டிருந்தால் அத்துடன் அத்தகைய நிதிகளின் அல்லது பிணைப் பொறுப்புக்களின் கொடுப்பனவொன்று அல்லது தீர்வையொன்று முறைமைக்கு வெளியே ஏதேனும் வேறு

செய்யப்பட்டால் எழுதப்பட்ட சட்டத்தின்கீழ் வறிதானதாக அல்லது வறிதாகக்கூடியதாக இருந்தால் அத்தகைய பங்குபற்றுநரின் ஒழிப்போன் அத்தகைய கொடுப்பனவு அல்லது தீர்வை எந்த ஆளின் நலனுக்காக செய்யப் பட்டதோ அந்த ஆளிடமிருந்து முறைமைக்கு வெளியே அத்தகைய கொடுப்பனவு அல்லது தீர்வை செய்யப்பட்டாற்போன்று அத்தகைய தொகை அறவிடப்படற்பாலதாதல் வேண்டும்.

(10) நாற்பத்தி ஏழாம் பிரிவின் ஏற்பாடுகளின் பொதுத் தன்மைக்குப் பங்கமின்றி பணச்சபை, பணச்சபையின் எவரேனும் உறுப்பினர், மத்திய வங்கியின் எவரேனும் அலுவலர் அல்லது தொழிலாளர் அல்லது பணச்சபையின் பணிப்புரையின்கீழ் செயற்படும் எவரேனும் ஆள் சபையில் அல்லது சபையின் எவரேனும் உறுப்பினர் அல்லது மத்திய வங்கியின் எவரேனும் அலுவலர் அல்லது தொழிலாளர் அல்லது சபையின் பணிப்பின் கீழ் செயற்படும் எவரேனும் ஆளினது முழுமையான கவனயீனம் அல்லது வேண்டுமென்ற துர்நடத்தையின் விளைவான ஏதேனும் நட்டம் அல்லது சேதம் இருந்தாலன்றி, எவரேனும் ஆள் அல்லது பங்குபற்றுநரினால் முறைமையை உபயோ சிக்கையில் நேரடியாக அல்லது மறைமுகமாக எழுகின்றதும் எவரேனும் ஆளினால் அல்லது பங்குபற்றுநரினால் அனுபவிக்கப்பட்ட அத்தகைய நட்டம் அல்லது சேதத்துக்கு ஆளாதலாகாது.

(11) முதலாம் உட்பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட முறைமையொன்றினூடாக பயனுற்ற ஏதேனும் கொடுக்கல் வாங்கல் அத்தகைய கொடுக்கல் வாங்கல் இலத்திரனியல் ரீதியாகக் கொண்டு நடாத்தப்படுகின்றது அல்லது அத்தகைய கொடுக்கல் வாங்கல் தொடர்பான தகவல் இலத்திரனியல் பதிவொன்றின் வலுவில் பேணப் படுகிறது என்ற ஏதுவின்மீது முழுமையாக அத்தகைய கொடுக்கல் வாங்கல் சட்டப்பயன்.

வலுவாந்தன்மை அமுலாக்கம் மறுக்கப்படலாகாது என்பதுடன் அத்தகைய பதிவு, 1995ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சான்றுச் சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்) பாகம் 11 மற்றும் 111 ஆம் ஏற்பாடுகளுக்கிணங்க அல்லது ஏதேனும் நீதிமன்றம் அல்லது நியாயசபை முன் கணனி சான்றை அளிப்பது தொடர்பில் அப்போதைக்கு வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்துக்கு அமைவாக ஏதேனும் நீதிமன்றம் அல்லது நியாய சபையின் முன்னரான வழக்கு நடவடிக்கைகளில் அளிக்கப்படலாம்.

(12) முதலாம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவை எப்படியிருப்பினும், அத்தகைய பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஏதேனும் அல்லது எல்லாப் பணிகளும், பணச் சபையினால் விதிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நியதி நிபந்தனைகளுக்கு அமைவாக பணச்சபையினால் அந்த நோக்கத்திற்காக அதிகாரமளிக்கப்பட்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றினால் கொண்டு நடாத்தப்படல் வேண்டும்.

(13) அப்பிரிவின் நோக்கங்களுக்காக —

"நேரடி பங்குபற்றுநர்" மற்றும் "பங்குச் சான்றிதழ் தொகுதிகளற்ற பிணைப் பொறுப்புக்கள்" என்பன, 112அ என்னும் பிரிவில் உள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும் :

"விதிகள்" என்பது, இப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்கீழ் மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட ஏதேனும் விதிகள் எனப் பொருள்படும் :

"பிணைப் பொறுப்புக்கள்" என்பது, நான்காம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் நோக்கங்களுக்காகத் தவிர 112(அ) என்னும் பிரிவின் கருத்திற்குட்பட்ட அதே

கருத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். பிணைப் பொறுப்புக்களை பங்குச் சான்றிதழ் தொகுதிகளற்ற பிணைப் பொறுப்புகள் அல்லது வேறுவகையாக வழங்கப்பட்ட மத்திய வங்கியின் பிணைப் பொறுப்புக்களை உள்ளடக்காது :

"தீர்வைக் கணக்கு" என்பது, இச்சட்டத்தின்கீழ் மத்திய வங்கியுடன் பங்குபற்றுநர் ஒருவரினால் பேணப்படுகின்றதும், மத்திய வங்கியின் அங்கீகாரத்துடன் முறைமையின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுகின்ற கணக்கொன்று எனப் பொருள்படும் ;

"பிணைப் பொறுப்புக்கள் கணக்கு" என்பது, 112அ என்னும் பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் நியதிகளின்படி மத்தியவங்கியில் பங்குபற்றுநர் ஒருவரினால் பேணப்படுகின்ற கணக்கொன்று எனப் பொருள்படும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 72 ஆம் பிரிவைத் திருத்துதல்.

15. முதன்மைச் சட்டவாக்கத்தின் 72 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(அ) அதன் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு 72 ஆம் பிரிவு என (1) ஆம் உட்பிரிவை மீள் இலக்கமிடுவதன் மூலமும் ;

(ஆ) மீளளிக்கப்பட்ட 72 ஆம் பிரிவில் "வாங்குதல் அல்லது கோரப்படும் ஏதேனும் தொகையை அதற்கு விற்றல் வேண்டும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "வாங்கலாம் அல்லது கோரப்படும் ஏதேனும் தொகையை அதற்கு விற்கலாம்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 74 ஆம் பிரிவைத் திருத்துதல்.

16. முதன்மைச் சட்டவாக்கத்தின் 74 ஆம் பிரிவு, அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவை நீக்குவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 76 ஆம் பிரிவைத் திருத்துதல்.

17. முதன்மைச் சட்டவாக்த்தின் 76 ஆம் பிரிவு, அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவை நீக்குவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

18. முதன்மைச் சட்டவாக்கத்தின் 76அ என்னும் பிரிவு நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 76அ என்னும் பிரிவைப் பதிலிடு செய்தல்.

செலாவணி வீதங்கள் தொடர்பான ஆளுநரின் தத்துவங்கள்.

76அ. (1) இலங்கையின் நாட்டிடைக் கொடுக்கல் வாங்கலுக்கு சாதாரணமாக தேவைப்படுகின்ற வெளிநாட்டு நாணயங்களின் இலங்கை ரூபா தொடர்பான திறத்தவர்களுள், 73 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க தீர்மானித்துச் சான்றுபடுத்துவதற்கு உசிதமற்றதென ஒருவர் கருதுமிடத்து, ஆளுநரானவர் —

(அ) அப்பிரிவின்கீழ் அத்தகைய வெளிநாட்டு நாணயங்களின் திறத்தவர்களை தீர்மானித்து சான்றுப்படுத்துவதிலிருந்து தவிர்த்துக்கொள்ளலாம் ; அத்துடன்

(ஆ) மத்திய வங்கியானது, கடன் அல்லது வேறு கொடுக்கல் வாங்கலில் வெளிநாட்டு செலாவணியை எந்த வீதங்களில் வாங்கி விற்கலாமென அந்த வீதங்களைத் தீர்மானிக்கலாம் அல்லது தீர்மானிக்காதிருக்கலாம்.

(2) முதலாம் உட்பிரிவின் நியதிகளின்படி ஆளுநர் செயல்படுகின்றவிடத்து, 73, 74 மற்றும் 76 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகள் சட்டத்திலும் ஏதேனும் வலுவோ அல்லது பயனோ இல்லா தொழிதல் வேண்டும்.

(3) ஆளுநரானவர் (1) (ஆ) என்னும் உட்பிரிவின் கீழ் உடன் அல்லது வேறு கொடுக்கல் வாங்கலில் வெளிநாட்டு நாணயத்தை எந்த வீதங்களில் மத்திய வங்கி வாங்கலாமோ அத்துடன் விற்கலாமோ அந்த வீதத்தை தீர்மானிக்குமிடத்து, பின்வரும் ஏற்பாடுகள் அத்தகைய தீர்மானத்தின்மீது ஏற்புடையதாதல் வேண்டும் :

(அ) அத்தகைய தீர்மானம் ஆளுநர் தேவையானது எனக் கருதக்கூடியவாறான அத்தகைய வெளிநாட்டு நாணயங்களுக்கு மட்டுப் படுத்தப்படலாம் :

(ஆ) (1) (அ) என்னும் உட்பிரிவின்கீழ்த் தீர் மானிக்கப்பட்ட வீதங்கள் வெளிநாட்டு நாணயத்தாளை மற்றும் குற்றி நாணயங் களின் கொள்வனவு மற்றும் விற்பனை விடயத்தில் ஏற்புடையதாதலாகாதானது, அத்தகைய விடயத்தில் மத்திய வங்கி யானது அத்தகைய கொள்வனவுகளை அல்லது விற்பனைக்கான மேலதிக செலவு களை அல்லது இடைநேர்விளைவான செலவுகளைக் கருத்திற்கெடுக்கலாம் :

(இ) மத்திய வங்கியானது, வெளிநாட்டுச் செலாவணியின் கொள்வனவு அல்லது விற்பனை தொடர்பில், அத்தகைய கொள்வனவு அல்லது விற்பனை சம்பந்த மாக உண்மையாக உறப்படும் தந்தி அல்லது வேறு செலவுத்தொகைகளைத் தவிர, எவ்விவரணத்தினதுமான ஏதே னும் தரகை ஏற்றுக்கொள்ளுதலாகாது அல்லது ஏதேனும் இறுப்பனவை விதித்த லாகாது :

(ஈ) உட்பிரிவு (1) (ஆ) வின்கீழ் ஆளுநரினால் தீர்மானிக்கப்படும் வீதங்களை, ஆளு நரினால் குறித்துரைக்கப்படக்கூடிய வாறான அத்தகைய எல்லைகளினுள் காலத்துக்குக்காலம் வேறுபடுத்துவதற்கு, எவரேனும் அலுவலரைப் பெயரினால் அல்லது பதவியினால் எழுத்தில் அதிகார மளிப்பது ஆளுநருக்குத் தகுதிவாய்ந்த தாதல் வேண்டும் :

(உ) வெளிநாட்டு நாணயம் தொடர்பில் உட்பிரிவு (1) (ஆ) வின்கீழ் ஆளுநர்

தீர்மானமொன்றைச் செய்கின்றவிடத்து, ஆனால், ஏதேனும் குறிப்பிட்ட வெளிநாட்டு நாணயம் தொடர்பில் அவ்வுட்பிரிவின்கீழ் தீர்மானமெதனையும் செய்யாதவிடத்து, மத்திய வங்கியானது, எந்த நாணயம் தொடர்பில் தீர்மான மெதுவும் செய்யப்படவில்லையோ அத்த கைய அந்த நாணயத்தை, உட்பிரிவு (1) (ஆ) வின்கீழ் எந்த வெளிநாட்டு நாணயம் தொடர்பில் ஆளுநர் தீர்மானமொன் றைச் செய்துள்ளாரோ அந்த ஏதேனும் வெளிநாட்டு நாணயம் தொடர்பாகச் சர்வதேசச் சந்தைகளில் அந்த நாணயத் துக்காக செலாவணி வீதத்தின் அடிப் படையில் கணக்கிடப்பட்ட ஒரு வீதத்தில் வாங்கலாம் அத்துடன் விற்பனை செய்ய லாம்.

(4) உட்பிரிவு (1) (அ) வின்கீழ், ஆளுநர், திறத்தவர்களைத் தீர்மானிக்காமலும் அத்தாட்சிப் படுத்தாமலும் இருப்பதுடன் உட்பிரிவு (1) (ஆ) வின்கீழ் மத்திய வங்கியானது அவ்விடத்திலேயே வெளிநாட்டுச் செலாவணியை வாங்கும் மற்றும் விற்பனை செய்யும் வீதங்களை அல்லது வேறு கொடுக்கல் வாங்கல்களைத் தீர்மானிக்காத விடத்து, மத்திய வங்கியானது, ஆளுநர் அல்லது ஆளுநரினால் அந்நோக்கத்துக்காக அதிகார மளிக்கப்படும் அலுவலரொருவர் தோதான தெனக் கருதக்கூடியவாறான அத்தகைய வீதங் களில் வெளிநாட்டுச் செலாவணியை வாங்கலாம், அத்துடன் விற்பனை செய்யலாம்.

(5) (அ) மத்திய வங்கியானது எவ்வீதங்களில் வெளிநாட்டுச் செலாவணியை வங்கி விற்பனை செய்யலாமோ அவ்வீதங்களை உட்பிரிவு (1) (ஆ) வின்கீழ் ஆளுநர் தீர்மானிக்குமிடத்து, ஆளு நர், அவ்விடத்திலான வெளிநாட்டுச் செலாவ ணியை ஏதேனும் வர்த்தக வங்கி அந்த ஆகக்குறைந்த வீதத்தில் வாங்கலாமோ அந்த

ஆகக்குறைந்த வீதத்தையும் அவ்விடத்திலான வெளிநாட்டுச் செலாவணியை ஏதேனும் வர்த்தக வங்கி அந்த ஆகக்கூடிய வீதத்தில் விற்பனை செய்யலாமோ அந்த ஆகக்கூடிய வீதத்தையும் தீர்மானிக்கலாம்.

(ஆ) உட்பிரிவு (1) (அ) வின் கீழ், ஆளுநர், திறத்தவர்களைத் தீர்மானிக்காமலும் அத்தாட்சிப் படுத்தாமலும் இருப்பதுடன், உட்பிரிவு (1) (ஆ) வின்கீழ் மத்திய வங்கி வெளிநாட்டுச் செலா வணியை வாங்கக்கூடிய அல்லது விற்பனை செய்யக்கூடிய வீதங்களைத் தீர்மானிக்காதிருத்தல் எவ்வாறிருப்பினும், ஆளுநர், ஏதேனும் வர்த்தக வங்கி அவ்விடத்திலான வெளிநாட்டுச் செலாவணியை ஆகக்குறைந்த எந்த வீதத்தில் வாங்கலாம் என்பதையும், அவ்விடத்திலான வெளிநாட்டுச் செலாவணியை ஏதேனும் வர்த்தக வங்கி எந்த ஆகக்கூடிய வீதத்தில் விற்பனை செய்யலாம் என்பதையும் தீர்மானிக்கலாம்.

(இ) மூன்றாம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியின் ஏற்பாடுகள், ஏற்றமாற்றங்களுடன், இவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் அல்லது (ஆ) என்னும் பந்தியின்கீழ் தீர்மானிக் கப்பட்ட ஆகக்குறைந்த ஆகக்கூடிய வீதங்களுக்கும் அவை தொடர்பாகவும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(ஈ) இவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் அல்லது (ஆ) என்னும் பந்தியின்கீழ் தீர்மான மெதுவும் செய்யப்படாதவிடத்து, வர்த்தக வங்கி யொன்று, சர்வதேச சந்தைகளில் வெளிநாட்டு நாணயத்துக்கான செலாவணி வீதங்களின் அடிப்படையில் கணக்கிடப்பட்ட வீதங்களில் அந்நாணயத்தை வாங்கலாம், விற்பனை செய்ய லாம் அல்லது அந்நாணயத்திலான ஏதேனும் கொடுக்கல் வாங்கலை நிறைவேற்றலாம்.

(உ) அவ்விடத்திலான வெளிநாட்டுச் செலாவணியை வர்த்தக வங்கிகள் எந்த ஆகக்குறைந்த, ஆகக்கூடிய வீதங்களில் வாங்கலாமோ அத்துடன் விற்பனை செய்யலாமோ அந்த வீதங்கள் பற்றி இவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் அல்லது (ஆ) என்னும் பந்தியின்கீழ் தீர்மானமொன்று செய்யப்படுமிடத்து,

(i) வர்த்தக வங்கியெதுவும், ஏற்புடையதாகக்கூடியவாறு அப்பந்திகளின்கீழ் தீர்மானிக்கப்பட்ட ஆகக்குறைந்த வீதத்துக்குக்கீழான ஏதேனும் வீதத்தில் அவ்விடத்திலான வெளிநாட்டுச் செலாவணியை வாங்குதலாகாது அல்லது ஏற்புடையதாகக்கூடியவாறு அவ்வாறு தீர்மானிக்கப்பட்ட ஆகக்கூடிய வீதத்தை விஞ்சுகின்ற ஏதேனும் வீதத்தில் அவ்விடத்திலான வெளிநாட்டுச் செலாவணியை விற்பனை செய்தலாகாது ; அத்துடன் வர்த்தக வங்கியெதுவும், அத்தகைய செலாவணியின் கொள்வனவு அல்லது விற்பனை தொடர்பில், அத்தகைய கொள்வனவு அல்லது விற்பனை தொடர்பில், அத்தகைய கொள்வனவு அல்லது விற்பனை சம்பந்தமாக உண்மையில் உறப்பட்ட தந்தி அல்லது வேறு செலவுத் தொகைகள் தவிர, ஏதேனும் விவரணத்தினவான ஏதேனும் தரகை ஏற்றுக்கொள்ளுதலோ அல்லது ஏதேனும் இறுப்பனவை விதித்தலோ ஆகாது ; அத்துடன்

(ii) வர்த்தக வங்கியெதுவும், அவ்விடத்திலான கொடுக்கல் வாங்கலாகவிராத, வெளிநாட்டுச் செலாவணியிலான ஏதேனும் கொடுக்கல், வாங்கலை அக்கொடுக்கல் வாங்கலின் மேலதிகச் செலவுத்தொகைகள், செலவுகள் அல்லது அபாயங்கள் என்பவற்றைக் கவனத்துட்கொண்டு நியாயமாகவிருப்பதற்கு

அதிகமான ஒரு விளிம்பினால், அல்லது ஆளுநரினால் அதற்கென விதித்துரைக் கப்படக்கூடியவாறான அத்தகைய விளிம் பெதுவுமிருப்பின் அதனால் ஏற்புடைய தாகக்கூடியவாறாக இவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் அல்லது (ஆ) என் னும் பந்தியின்கீழ் தீர்மானிக்கப்பட்ட வீதங்களிலிருந்து வித்தியாசப்படுகின்ற ஏதேனும் வீதத்தில் நிறைவேற்றுதலா காது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் VI ஆம் பாகத்திலுள்ள தலையங்கத்தை மாற்றீடு செய்தல்.

19. முதன்மைச் சட்டவாக்கத்தின் 93 ஆம் பிரிவுக்கு உடன் முன்னர் VI ஆம் பாகத்தில் தோன்றுகின்ற தலையங்கம் இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் தலையங்கம் இடப்படுகின்றது :

"வர்த்தக வங்கிகளினதும் விதித்துரைக்கப்பட்ட நிதி நிறுவனங் களினதும் ஒதுக்குகளை ஒழுங்குபடுத்துதல்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 93 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

20. முதன்மைச் சட்டவாக்கத்தின் 93 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :

"ஒதுக்குத் தேவைப் பாடுகள்.

93. (1) பணச்சபையானது, நிதிமுறைமையின் கடன் தொழிற்பாடுகளினால் உருவாக்கப்பட்ட பணத்தினை அளவை மட்டுப்படுத்துவதற்காக, வர்த்தக வங்கிகளையும் (இப்பாகத்தில் "விதித்து ரைக்கப்பட்ட நிதி நிறுவனங்கள்" எனக் குறிப்பீடு செய்யப்படுகின்றவையும்), பணச்சபையினால் விதித்துரைக்கப்படக்கூடியவையுமான இலங்கை யிற் தொழிற்படுகின்ற அத்தகைய வேறு நிதி நிறுவனங்களையும், சபையானது அவசியமெனக் கொள்ளக்கூடியவாறாக அவற்றின் வைப்புப் பணப்பொறுப்புகளுக்கு எதிரிடையாகவும் அவற் றின் ஏனைய நிதிப்பொறுப்புகளுள் அத்தகைய வற்றுக்கு எதிரிடையாகவும் ஒதுக்குகளைப் பேணும்படி தேவைப்படுத்துதல் வேண்டுமென்ப துடன், அந்நோக்கத்துக்காக, எந்த வைப்புப் பணப்பொறுப்புகளின் வகுப்புகளுக்கு எதிரிடை

யாகவும் எந்த ஏனைய நிதிப்பொறுப்புகளின் வகுதிகளுக்கு எதிரிடையாகவும் ஒதுக்குகள் பேணப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்படுகின்றதோ அந்த வகுப்புகளையும் வகுதிகளையும் விதித்துரைத்தலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் வர்த்தக வங்கியொன்றினால் அல்லது விதித்துரைக்கப்பட்ட நிதி நிறுவனமொன்றினால் பேணப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட ஒதுக்குகள் முறையே அவற்றின் வைப்புப் பணப்பொறுப்புகளின் ஒவ்வொரு வகுப்பினதும் மற்றும் அவற்றின் ஏனைய நிதிப்பொறுப்புகளின் ஒவ்வொரு வகுதியினதும் அளவுகளுக்கு விகித சமமானவையாக விருத்தல் வேண்டுமென்பதுடன் (4) ஆம் உட்பிரிவுக்கமைய மத்திய வங்கியின் ரூபா வைப்புகளின் வடிவத்திலிருத்தலும் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழ் விதித்துரைக்கப்பட்ட நிதி நிறுவனங்களினால் மத்திய வங்கியில் பேணப்பட்ட கணக்குகள் அத்தகைய நிதி நிறுவனங்களினால் ஒதுக்குகளாகப் பேணப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட ரூபா வைப்புக்களை வைத்திருக்கும் நோக்கத்துக்காக மட்டுமே பேணப்படுதல் வேண்டும்.

(4) பணச்சபையானது தேசிய பொருளாதாரத்தினதும் நாட்டின் வங்கித் தொழிலினதும் மற்றும் நிதி முறைமைகளினதும் நலன் கருதி (1) ஆம் உட்பிரிவின்கீழ் பேணும்படி தேவைப்படுத்தப்பட்ட ஒரு மத்திய வங்கியின் ரூபா வைப்புக்கள் தவிர்ந்த சொத்துக்களின் வடிவத்தில் பேணப்படுதலை அனுமதிக்கலாம்.

(5) இப்பிரிவில் —

"நிதித்தொழில்" என்பது, நிதிநிறுவனமொன்று தொடர்பாக, வைப்புப்பணம் என்றவகையாக அல்லது எந்த நாணயமாற்றுண்டியல்கள், வாக்குறுதிப்பத்திரங்கள், முறிகள், சான்றிதழ்கள், தாள்கள்,

வர்த்தகப்பத்திரங்கள் அல்லது வேறு இவற்றையொத்த சாதனங்கள் என்பவற்றை வழங்குவதன்மூலம், தொழிலின் சாதாரண நெறியின்போது பொதுமக்களிடமிருந்து எவ்வடிவத்திலும் பணம் ஏற்றுக் கொள்ளுதலும், தொழிலொன்றாகக் கடன்கள் வழங்குவதற்காக அல்லது மூன்றாம் திறத்தவர்களுக்கு அல்லது மூன்றாம் திறத்தவர்களின் நன்மைக்கென அப்பணத்தைக் கிடைக்கக் கூடியதாக்குவதற்காக முழுமையாக அல்லது பகுதியளவில் அப்பணத்தைப் பயன்படுத்துதலும் என்று பொருளாகும் ;

"நிதி நிறுவனம்" என்பது, 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கித்தொழிற் சட்டத்தில் வரைவிலக்கணங்களில் கூறப்பட்டவாறு உரிமம்பெற்ற தனித்துவம் வாய்ந்த வங்கியென்று, அல்லது 1988 ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க, நிதிக் கம்பெனிகள் சட்டத்தில் வரைவிலக்கணம் கூறப்பட்டவாறான ஒரு நிதிக் கம்பெனியென்று பொருளாகும் என்பதுடன், நிதித் தொழிலைக் கொண்டுநடாத்துகின்ற எவரேனும் ஆளையும் அல்லது ஆட்கள் குழுவையும் உள்ளடக்கும் ;

"ஏனைய நிதிப் பொறுப்புகள்" என்பது, உரிமம்பெற்ற வர்த்தக வங்கி அல்லது விதித்துரைக்கப்பட்ட நிதிநிறுவனம் ஒன்று தொடர்பாக, எந்த நாணய மாற்றுண்டியல்கள், வாக்குறுதிப்பத்திரங்கள், முறிகள், சான்றிதழ்கள், தாள்கள், வர்த்தகப்பத்திரங்கள், அல்லது வேறு இவற்றையொத்த சாதனங்கள் என்பன மூலம் பொதுமக்களிடமிருந்து பணம் திரட்டப்படுகின்றதோ அந்த நாணயமாற்றுண்டியல்கள், வாக்குறுதிப்பத்திரங்கள், முறிகள், சான்றிதழ்கள், தாள்கள், வர்த்தகப் பத்திரங்கள் அல்லது வேறு இவற்றை

யொத்த சாதனங்கள் என்பவற்றை வழங்குவதன்மூலம், அத்தகைய ஏதேனும் வங்கியின் தொழில் நெறியின்போது, பொதுமக்களிடமிருந்து ஏதேனும் வடிவத்தில் பணம் ஏற்றுக் கொள்வதன்பேரில் அதனால் உறப்பட்ட (வைப்புப் பணப்பொறுப்புக்கள் தவிர்ந்த) பொறுப்புக்கள் என்று பொருளாகும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 94 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

21. முதன்மைச் சட்டவாக்கத்தின் 94 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :

"பணச்சபை ஒதுக்கு விதங்களை விதந்துரைத்தல்.

94. (1) பணச்சபையானது, 93 ஆம் பிரிவின்கீழ் எந்த வைப்புப் பணப்பொறுப்புகளின் ஒவ்வொரு வகுப்புக்கும் எதிரிடையாகவும் ஏனைய நிதிநிறுவனங்களின் ஒவ்வொரு வகுதிக்கும் எதிரிடையாகவும் ஒதுக்குகள் பேணப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்படுகின்றதோ அந்த வகுப்புக்கும் வகுதிக்கும் ஏற்புடையனவான ஒதுக்கு விகிதங்களை விதித்துரைத்தல் வேண்டுமென்பதுடன், அவற்றைக் காலத்துக்குக்காலம் வேறுபடுத்தலாம்.

(2) அதிகரிப்புத் தேதியன்று உளதாயிருந்த ஏதேனும் பொறுப்புத் தொடர்பில் ஏற்புடையதாகவிருக்கவேண்டிய ஓர் ஒதுக்கு விகிதத்திலான ஏதேனும் அதிகரிப்பு, படிப்படியாகப் பணச்சபையினால் செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன், முப்பது நாட்களைக் கொண்ட ஏதேனுமொரு காலப்பகுதியின்போது நான்கு சதவீதப் புள்ளிகளை விஞ்சுதலுமாகாது.

(3) பணச்சபையானது, விதிவிலக்கான சந்தர்ப்பங்களிற்றவிர, ஓர் ஒதுக்கு விகிதத்திலான ஏதேனும் அதிகரிப்பு எத்தேதியன்று நடைமுறைக்கு வரவுள்ளதோ அத்தேதிபற்றி பதினான்கு நாட்களுக்குக் குறையாத அறிவித்தலை வர்த்தக வங்கிகளுக்கும் ஏனைய விதித்துரைக்கப்பட்ட நிதி நிறுவனங்களுக்கும் கொடுப்பதற்கு முயலுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 95 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

22. முதன்மைச் சட்டவாக்கத்தின் 95 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :—

"ஒதுக்குகளின் மீதான வட்டி எப்போது செலுத்தப்படற்பாலதென்பது.

95. ஏதேனும் வர்த்தக வங்கி அல்லது ஏதேனும் விதித்துரைக்கப்பட்ட நிதி நிறுவனம், ஏதேனும் வகுப்பினவான வைப்புப்பணம் பொறுப்புகளுக்கு எதிரிடையாக அல்லது ஏதேனும் வகுதியினவான நிதிப்பொறுப்புகளுக்கு எதிரிடையான ஓர் ஒதுக்கைப் பேணும்படி தேவைப்படுத்தப்படுமிடத்து, மத்திய வங்கியானது, பணச்சபையினால் அவ்வாறு தீர்மானிக்கப்படின், தேசியப் பொருளாதாரத்தினதும் நாட்டின் வங்கித்தொழிலினதும் மற்றும் நிதிமுறைகளினதும் நலன்கருதி, விடயத்துக்கேற்ப அந்த வங்கிக்கு அல்லது அந்த நிதிநிறுவனத்துக்கு, ஓர் ஒதுக்காகப் பேணப்பட்ட தொகையின்மீது அல்லது அதன் பகுதியின்மீது பணச்சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வீதத்திலான வட்டியைச் செலுத்துதல் வேண்டும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 96 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

23. முதன்மைச் சட்டவாக்கத்தின் 96 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :

"தேவைப்படும் ஒதுக்குகளைக் கணிப்பிடுதல்.

96. (1) வர்த்தக வங்கியொன்றினால் அல்லது விதித்துரைக்கப்பட்ட நிதி நிறுவனமொன்றினால் பேணப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட ஒதுக்குகள், பணச்சபையினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய அடிப்படையின் மீது கணக்கிடப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக, வர்த்தக வங்கியொன்றின் அல்லது விதித்துரைக்கப்பட்ட நிதிநிறுவனமொன்றின் இலங்கையிலுள்ள பிரதான அலுவலகமும் அத்தகைய வங்கியின் அல்லது நிதிநிறுவனத்தின் அந்தந்தக் கிளைகளும் முகவர் நிலையங்களும் ஒரு கூறாக விருப்பனவாகக் கருதப்படுதல் வேண்டும்.".

24. முதன்மைச் சட்டவாக்கத்தின் 97 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :

முதன்மைச் சட்டவாக்கத்தின் 97 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

"ஒதுக்குக் குறைபாடுகளின் விளைவுகள்.

97. (1) வர்த்தக வங்கியொன்றினால் அல்லது விதித்துரைக்கப்பட்ட நிதி நிறுவனமொன்றினால் பேணப்பட்ட ஒதுக்குகள், 96 ஆம் பிரிவின்கீழ் விதித்துரைக்கப்பட்ட அடிப்படையின்மீது கணக்கிடப்பட்டவாறு, அத்தகைய வங்கியினால் அல்லது நிதிநிறுவனத்தினால் பேணப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட ஒதுக்குகளுக்குக் குறைவாகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப வர்த்தக வங்கி அல்லது விதித்துரைக்கப்பட்ட நிதிநிறுவனம், குறைபாட்டுத் தொகையின்மீதான வட்டியைப் பணச்சபையினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய வீதத்தில் மத்திய வங்கிக்குச் செலுத்துதல் வேண்டும்.

(2) வர்த்தக வங்கியொன்று அல்லது விதித்துரைக்கப்பட்ட நிதிநிறுவனமொன்று, 96 ஆம் பிரிவின்கீழ் விதித்துரைக்கப்பட்ட அடிப்படையின் மீது கணக்கிடப்பட்டவாறு அத்தகைய வங்கியினால் அல்லது நிதி நிறுவனத்தினால் பேணப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட ஒதுக்குகளைப் பேணுவதற்குக் கிரமமாகத் தவறுமிடத்து, பணச்சபையானது, தேசியப் பொருளாதாரத்தின் நலன்கருதி —

(அ) அந்த வங்கி அல்லது நிதிநிறுவனம் கடன்கள் வழங்குவதை அல்லது முதலீடுகள் செய்வதைத் தடைசெய்து அல்லது மட்டுப்படுத்தி ;

(ஆ) அவ்வங்கியின் அல்லது நிதிநிறுவனத்தின் தேறிய இலாபங்கள் முழுவதையும் அல்லது அவற்றின் ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட பகுதியை அவ்வங்கியின் அல்லது நிதிநிறுவனத்தின் பங்குதாரர்களுக்குப் பங்கிலாபமொன்றைக் கொடுப்பனவு

செய்யும் நோக்கத்துக்காகப் பிரயோகித்
தலைத் தடைசெய்து,

கட்டளையாக்கலாம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 98 ஆம் பிரிவைத் திருத்துதல்.

25. முதன்மைச் சட்டவாக்கத்தின் 98 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் "இப்பாகத்தின் முற்போந்த ஏற்பாடுகளின்கீழ்" என்ற சொற்களுக்குப் பதிலாக, "இப்பாகத்தின்கீழ்" என்ற சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 98அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

26. முதன்மைச் சட்டவாக்கத்தின் 98 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றதுடன் இது அச்சட்டவாக்கத்தின் 98அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :

"வங்கி மேற்பார்வைப் பணிப்பாளரின் தத்துவங்கள்.

98அ. (1) வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர், விதித்துரைக்கப்பட்ட நிதிநிறுவனமொன்றின் புத்தகங்கள், கணக்குகள் மற்றும் பதிவேடுகள் என்பவற்றைப் பரிசோதனை செய்யலாம் அல்லது அவரது திணைக்களத்திலுள்ள பரிசோதகர் ஒருவரைக்கொண்டு பரிசோதனை செய்விக்கலாம் என்பதுடன், அத்தகைய ஏதேனும் நிதிநிறுவனத்தை அல்லது அதன் பணிப்பாளர்களை அல்லது அலுவலர்களை, இச்சட்டத்தின் இப்பாகத்தினது ஏற்பாடுகளுக்கு அத்தகைய நிறுவனம் இணங்கியொழுகுகின்றதா என்பதை நிச்சயிக்கும் நோக்கத்துக்காகத் தேவைப்படக்கூடியவாறான அத்தகைய புத்தகங்களை, கணக்குகளை, பதிவேடுகளை அல்லது தகவலைக் காலத்துக்குக்காலம் அல்லது குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிகளினுள் கொடுத்துதவுமாறு தேவைப்படுத்தலாம்.

(2) வங்கி மேற்பார்வைப் பணிப்பாளர் அல்லது அவரது திணைக்களத்திலுள்ள பரிசோதகர் ஒருவர் (1) ஆம் உட்பிரிவினால் அவருக்களிக்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகிக்கையில் அத்தகைய பணிப்பாளரை அல்லது பரிசோத

கரை எதிர்க்கின்ற அல்லது அவருக்கு முட்டுக் கட்டையிடுகின்ற எவரேனுமாள் தவறொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 112அ என்னும் பிரிவைத் திருத்துதல்.

27. முதன்மைச் சட்டவாக்கத்தின் 112அ என்னும் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :

(அ) அப்பிரிவுக்கான ஓரக்குறிப்பை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய ஓரக்குறிப்பை இடுவதன் மூலமும் :—

"மத்திய வங்கியில் கணக்குகளையும் பங்குச் சான்றிதழ் தொகுதியற்ற பிணைப்பொறுப்புகளுக் கான வைப்பிடமொன்றையும் பேணுவதற்கான வசதிகள்.".

(ஆ) அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் "நேரடிப் பங்கேற்பாளர்களுக்கு" என்ற சொற்களுக்குப் பதிலாக "நேரடிப் பங்கேற்பாளர்களுக்கு ; அத்துடன்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(இ) அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை நேரேயுட னடுத்துப் பின்னர் பின்வரும் புதிய பந்தியை இடுவதன்மூலமும் :

"(இ) நேரடிப் பங்கேற்பாளர்களின் மத்திய வங்கியினது பங்குச்சான்றிதழ் தொகுதியற்ற பிணைப்பொறுப்புகளுக்கான உரித்தையும் விற்பனையாளர் நேரடிப் பங்கேற்பாளர் களின் விடயத்தில், அவர்களின் வாடிக்கை யாளர்களையும் பதிவதற்கென வைப்பிட மொன்றைப் பேணுவதற்கும் வசதிகளை ஏற்பாடுசெய்தல் வேண்டும். வைப்பிடம் தொடர்பாக மத்திய வங்கியானது, அவசிய மென அது கொள்ளக்கூடியவாறான அத்த கைய விதிகளையும் ஒழுங்குவிதிகளையும் ஆக்கலாம்.";

(இ) "நேரடிப் பங்குபற்றுநர்" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன்மூலமும் :

"விற்பனையாளர் நேரடிப் பங்குபற்றுநரும்", "நேரடிப் பங்குபற்றுநரும்" உள்ளூர்த் திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டத்திலும் பதிவு செய்யப்பட்ட பங்குத்தொகுதி, பிணையங்கள் கட்டளைச்சட்டத்திலும் அவற்றுக்குக் குறித்தளிக்கப்பட்ட அந்தந்தப் பொருள்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :";

(ஈ) "தொடக்க விற்பனையாளர்" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலமும் :—

"தொடக்க விற்பனையாளர்" என்பது, உள்ளூர்த் திறைசேரி உண்டியல்கள் கட்டளைச்சட்டத்திலும், பதிவுசெய்யப்பட்ட பங்குத்தொகுதி, பிணையங்கள் கட்டளைச்சட்டத்திலும் அதற்குக் குறித்தளிக்கப்பட்ட பொருளைக் கொண்டிருத்தலும் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 112ஆ என்னும் பிரிவை மாற்றீடு செய்தல்.

28. முதன்மைச் சட்டவாக்கத்தின் 112ஆ என்னும் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :—

"98(1), 112அ என்னும் பிரிவுகளின் கீழான வசதிகளைக் கூட்டிணைக்கப்பட்ட ஏதேனும் குழு வழங்குதல்.

112ஆ. (1) பிரிவு 98 மற்றும் பிரிவு 112அ என்பவற்றில் குறிப்பீடுசெய்யப்பட்ட பணிகளுள் எவையும் அல்லது எல்லாம், அத்தகைய பிரிவுகளின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், பணச் சபையினால் விதிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நியதிநிபந்தனைகளுக்கமைய, பணச் சபையினால் அனுமதிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நியதி நிபந்தனைகளுக்கமைய, பணச் சபையினால் அந்நோக்கத்துக்கென அதிகாரமளிக்கப்பட்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றினால் நிறைவேற்றப்படலாம்.

(2) ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்படும் கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்று, அத்தகைய பணிகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காக மத்திய வங்கியுடன் கணக்கொன்றை வைத்திருக்கலாம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 122 ஆம் பிரிவைத் திருத்துதல்.

29. முதன்மைச் சட்டவாக்கத்தின் 122 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(அ) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் "பிரிவு 30" என்பதிலிருந்து "குற்றவாளியாகும் ஒவ்வொரு ஆளும்" என்பது வரையிலான எல்லாச் சொற்களையும் நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் சொற்களை இடுவதன்மூலமும் :

"30 ஆம் அல்லது 32(2) ஆம் அல்லது 45 ஆம் அல்லது 46 ஆம் அல்லது 50 ஆம் அல்லது 98அ(2) ஆம் பிரிவு அல்லது 30 ஆம் அல்லது 79 (2) (இ) ஆம் அல்லது 98அ (1) ஆம் அல்லது 101 ஆம் அல்லது 102 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட அல்லது விடுக்கப்பட்ட ஏதேனும் விதியை, ஒழுங்குவிதியை, கட்டளையை, பணிப்பை அல்லது தேவைப்பாட்டை மீறுகின்றமை அல்லது அவற்றுக்கிணங்கியொழுகத் தவறுகின்றமை காரணமாகத் தவறொன்றுக்குக் குற்றவாளியாகும் ஆள் ஒவ்வொருவரும், பின்வருவனவற்றுக்கு ஆளாதல் வேண்டும் ;"

(ஆ) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் —

(i) அதனை (அ) என்னும் பந்தியில், "இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாவை" என்ற சொற்களுக்குப் பதிலாக, "ஐந்து இலட்சம் ரூபாவை" என்ற சொற்களை இடுவதன் மூலமும் ;

(ii) அதன் (ஆ) என்னும் பந்தியில் "பத்தாயிரம் ரூபாவை" என்ற சொற்களுக்குப் பதிலாக, "ஒரு மில்லியன் ரூபாவை" என்ற சொற்களை இடுவதன்மூலமும் ;

(இ) அப்பிரிவின் (2அ) என்னும் உட்பந்தியில் "மூவாயிரம் ரூபாவை" என்ற சொற்களுக்குப் பதிலாக "ஐந்து இலட்சம் ரூபாவை" என்ற சொற்களை இடுவதன் மூலமும் ;

(ஈ) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் "ஐந்நூறு ரூபாவை" என்ற சொற்களுக்குப் பதிலாக, "ஒரு இலட்சம் ரூபாவை" என்ற சொற்களை இடுவதன் மூலமும்.

ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

30. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387: (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.